# TNPSC TET SI EXAM

## 7. 7ஆம் வகுப்பு Q அறிவியல் தேர்வு

7th Standard

1) பின்வருவனவற்றுள் எது வழி அளவு?

(a) நிறை (b) நேரம் (c) பரப்பு (d) நீளம்

2) பின்வருவனவற்றுள் எது சரி?

(a) 1L = 1cc (b) 1L = 10 cc (c) 1L = 100 cc (d) 1L = 1000 cc

3) அடர்த்தியின் SI அலகு

(a) கிகி / மீ$^2$ (b) கிகி / மீ$^3$ (c) கிகி / மீ (d) கி / மீ$^3$

4) சம நிறையுள்ள இரு கோளங்களின் கனஅளவுகளின் விகிதம் 2:1 எனில், அவற்றின் அடர்த்தியின் விகிதம்

(a) 1:2 (b) 2:1 (c) 4:1 (d) 1:4

5) ஒளி ஆண்டு என்பது எதன் அலகு?

(a) தொலைவு (b) நேரம் (c) அடர்த்தி (d) நீளம் மற்றும் நேரம்

6) ஒரு பொருளானது r ஆரம் கொண்ட வட்டப்பாதையில் இயங்குகிறது. பாதி வட்டம் கடந்த பின் அப்பொருளின் இடப்பெயர்ச்சி

(a) சுழி (b) r (c) 2r (d) r/2

7) கீழே கொடுக்கப்பட்டுள்ள திசைவேகம்- காலம் வரைபடத்திலிருந்து அப்பொ ருளானது



(a) சீரான இயக்கத்தில் உள்ளது (b) ஓய்வு நிலையில் உள்ளது (c) சீரற்ற இயககத்தில் உள்ளது

(d) சீரான முடுககத்தில் பொருள் இயங்குகிறது

8) கீழே உள்ள படங்களில் எப்படமானது இயங்கும் பொருளின் சீரான இயக்கத்தினை குறிக்கிறது?

(a)  (b)  (c)  (d) 

9) ஒரு சிறுவன் குடை இராட்டினத்தில் 10 மீ/வி என்ற மாறாத வேகத்தில் சுற்றி வருகிறான். இக்கூற்றிலிருந்து நாம் அறிவது

(a) சிறுவன் ஓய்வு நிலையில் உள்ளான் (b) சிறுவனின் இயககம் முடுக்கப்படாத இயக்கமாகும்

(c) சிறுவனின் இயககம் முடுக்கப்பட்ட இயக்கமாகும்

(d) சிறுவன் மாறாத திசைவேகத்தில் இயங்குகிறான்

10) ஒரு பொருளின் சமநிலையை நாம் எவ்வாறு அதிகரிக்கலாம்?

(a) ஈர்பபு மையத்தின் உயரத்தினைக் குறைத்தல்

(b) ஈர்பபு மையத்தின் உயரத்தினை அதிகரித்தல் (c) பொருளின் உயரத்தினை அதிகரித்தல்

(d) பொருளின் அடிப்பரப்பின் அகலத்தினைக் குறைத்தல்

11) கீழ்க்கண்டவற்றுள் உலோகம் எது?

(a) இரும்பு (b) ஆக்சிஜன் (c) ஹீலியம் (d) தண்ணீர்

12) ஆக்சிஜன், ஹைட்ரஜன் மற்றும் சல்பர் ஆகியவை கீழ்க்கண்டவற்றுள் எதற்கு உதாரணம்?

(a) உலோகம் (b) அலோகம் (c) உலோகப்போலிகள் (d) மந்த வாயுக்கள்

13) கீழ்க்கண்டவற்றுள் ஒரு தனிமம் மற்றும் சேர்மத்தின் மூலக்கூறைக் குறிக்க க்கூடிய எளிய மற்றும் அறிவியல் பூர்வமான முறை எது?

(a) கணித வாய்ப்பாடு (b) வேதியியல் வாய்ப்பாடு (c) கணிதக் குறியீடு

(d) வேதியியல் குறியீடு

14) அறைவெப்பநிலையில் திரவமாக உள்ள உலோகம் எது?

(a) குளோரின் (b) சல்பர் (c) பாதரசம் (d) வெள்ளி

15) எப்பொழுதுமே பளபளப்பான, வளையக்கூடிய, ஒளிரும் தன்மையுள்ள தனிமம் எது?

(a) அலோகம் (b) உலோகம் (c) உலோகப்போலிகள் (d) வாயுக்கள்

16) பருப்பொருளின் அடிப்படை அலகு _____ ஆகும்.

(a) தனிமம் (b) அணு (c) மூலக்கூறு (d) எலக்ட்ரான்

17) அணுக்கருவைச் சுற்றி வரும் அடிப்படை அணுத்துகள் _____ ஆகும்.

(a) அணு (b) நியூட்ரான் (c) எலக்ட்ரான் (d) புரோட்டான்

18) _____ நேர்மின் சுமையுடையது.

(a) புரோட்டான் (b) எலக்ட்ரான் (c) மூலக்கூறு (d) நியூட்ரான்

19) ஓர் அணுவின் அணு எண் என்பது அதிலுள்ள _____ ஆகும்.

(a) நியூட்ரான்களின் எண்ணிக்கை (b) புரோட்டான்களின் எண்ணிக்கை

(c) புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்களின் மொத்த எண்ணிக்கை

(d) அணுக்களின் எண்ணிக்கை

20) நியூக்ளியான்கள் என்பது _____ குறிக்கும்.

(a) புரோட்டான்கள் மற்றும் எலக்ட்ரான்களைக் (b) நியூட்ரான்கள் மற்றும் எலக்ட்ரான்களைக்

(c) புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்களைக் (d) நியூட்ரான்கள் மற்றும் பாஸிட்ரான்களைக்

21) இலைகளின் மூலம் உடல் வழி இனப்பெருக்கம் நடத்துவது

(a) பிரையோபில்லம் (b) பூஞ்சை (c) வைரஸ் (d) பாக்டீரியா

22) ஈஸ்ட்டின் பாலிலா இனப்பெருக்க முறை

(a) ஸ்போர்கள் (b) துண்டாதல் (c) மகரந்த சேர்க்கை (d) மொட்டு விடுதல்

23) ஒரு தாவரத்தின் இனப்பெருக்க உறுப்பு

(a) வேர் (b) தண்டு (c) இலை (d) மலர்

24) மகரந்தச் சேர்க்கையாளர்கள் என்பவை

(a) காற்று (b) நீர் (c) பூச்சிகள் (d) மேற்கூறிய அனைத்தும்

25) பற்றுவேர்கள் காணப்படும் தாவரம்

(a) வெற்றிலை (b) மிளகு (c) இவை இரண்டும் (d) இவை இரண்டும் அல்ல

26) ரவி நல்ல மனநிலையும் திடகார்த்தரமான உடலையும் பெற்றிருக்கிறான்.இது எதைக் குறிக்கிறது.

(a) சுகாதாரம் (b) உடல்நலம் (c) சுத்தம் (d) செல்வம்

27) தூக்கம் உடலுக்கு மட்டுமல்ல, இதற்கும் சிறந்தது.

(a) மகிழ்ச்சி (b) ஓய்வு (c) மனம் (d) சுற்றுச்சூழல்

28) நாம் வாழுமிடம் இவ்வாறு இருக்க வேண்டும்.

(a) திறந்த (b) மூடியது (c) சுத்தமான (d) அசுத்தமான

29) புகையிலையை மெல்லுவதால் ஏற்படுவது

(a) இரத்த சோகை (b) பற்குழிகள் (c) காசநோய் (d) நிமோனியா

30) முதலுதவி என்பதன் நோக்கம்

(a) பணத்தைச் சேமித்தல் (b) வடுக்களைத் தடுத்தல் (c) மருத்துவப் பராமரிப்பைத் தடுத்தல்

(d) வலி நிவாரணம்

31) அசைவூட்டம் எதற்கு உதாரணம்?

(a) ஒலித் தொடர்பு (b) காட்சித் தொடர்பு (c) வெக்டர் தொடர்பு (d) ராஸ்டர் தொடர்பு

32) போட்டோஷாப் மென்பொருளை அதிகம் பயன் படுத்துபவர்கள் யார்?

(a) ஆசிரியர் (b) மருத்துவர் (c) வண்ணம் அடிப்பவர் (d) புகைப்படக் கலைஞர்கள்.

33) மைக்ரோசாப்ட் போட்டோஸ்டோரியில் நமது படங்களைப் பதிவேற்ற பயன்படுத்தபடும் தெரிவு எது?

(a) BEGIN A STORY (b) IMPORT PICTURES (c) SETTINGS (d) VIEW YOUR STORY

34) கீழ்க்காண்பவற்றுள் கணினியில் உருவாக்கப்பட்ட தோற்றங்களை உண்மையான உருவம் போல் காட்டுவது எது?

(a) இங்க்ஸ்கேப் (b) போட்டோ ஸ்டோரி (c) மெய்நிகர் தொழில் நுட்பம்
(d) அடோபி இல்லுஸ்ட்ரேட்டர்

35) படப்புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கபடுபவை எவை?

(a) ராஸ்டர் (b) வெக்டர் (c) இரண்டும் (d) மேற்கண்ட எதுவுமில்லை

36) சின்னங்களை உருவாக்கப் பயன்படுத்தப்படும் மென்பொருள் எது?

(a) போட்டோஷாப் (b) இல்லுஸ்ட்ரேட்டர் (c) வெக்டார் வரைகலை (d) போட்டோ ஸ்டோரி

37) ஒழுங்கற்ற வடிவமுள்ள பொருள்களின் பரப்பளவினை ______ ஐ பயன்படுத்தி காணலாம்.

38) ______ பொருள்களின் கன அளவை சூத்திரத்தை பயன்படுத்தி காணலாம்.

39) ஒரு லிட்டர் என்பது _____ cc ஆகும்.

40) 1 அவுன்ஸ் = ______

41) ஒழுங்கற்ற வடிவமுடைய பொருள்களின் கன அளவை ______ மற்றும் _____ யை பயன்படுத்தி கண்டுபிடிக்கலாம்.

42) சமமான கன அளவு கொண்ட பொருள்களில் அதிக நிறை திணிக்கப்பட்டிருந்தால் அதன் அடர்த்தி_____ .

43) அடர்த்தியின் CGS அலகு ______

44) விளக்கெண்ணையின் அடர்த்தி ______

45) வெற்றிடத்தில் ஒளியின் வேகம் _____

46) நமது சூரிய குடும்பத்திற்கு மிக அருகில் அமைந்துள்ள விண்மீன் ______

47) _______ என்பது ஒரு மணி நேரத்தில் ஒரு நாட்டிக்கல் மைல் தொலைவு கடக்கத் தேவைப்படும் வேகம் ஆகும்.

48) வேகத்தின் SI அலகு_____

49) ______ மாறும் வீதம் முடுக்கம் எனப்படும்.

50) ஒரு பொருளின் ஆரம்ப நிலையினைத் தக்கவைத்துக் கொள்ளும் திறனே அப்பொருளின்______ எனப்படும்.

51) சீரான திசைவேகத்தில் செல்லும் பொருளின் முடுக்கம்_____

52) பயணிகள் விமானத்தின் வேகம்_____

53) பேரண்டத்தில் காணப்படும் ஹைட்ரஜனின் சதவீத இயைபு______

54) நைட்ரிக் ஆக்ஸைடு ஒரு_____ மூலக்கூறு.

55) கணினி சிப்புகள் தயாரிப்பில் பயன்படும் தனிமம்____

56) _____ சிகிச்சைக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படும் தனிமம் பிஸ்மத் ஆகும்.

57) கடினமான மற்றும் பளபளப்பான அலோகம்______

58) மின்சாரத்தை நன்கு கடத்தக்கூடிய ஒரு அலோகக் கடத்தி____

59) கார்பன், ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் ஆகிய தனிமங்களைக் கொண்ட சேர்மத்திற்கு ஒரு உதாரணம்______

60) ஆர்கான் மற்றும் ஆர்சனிக் தனிமங்களின் குறியீடுகள் முறையே _____ மற்றும் ______ ஆகும்.

61) ஆக்ஸிஜன் மற்றும் சல்ஃபரின் அணுக்கட்டு எண்கள் முறையே_____

62) காற்றில் 99% காணப்படும் தனிமங்களின் மூலக்கூறுகள்_____ மற்றும்______ ஆகும்.

63) புரோட்டான் மற்றும் நியூட்ரானின் நிறையுடன் ஒப்பிடும் போது, எலக்ட்ரானின் நிறை ______

64) அணுக்கருத் துகள்களின் பொதுவான பெயர்_____

65) எலக்ட்ரானின் நிறை_____

66) மின்சுமையற்ற அடிப்படைத் துகள்_____

67) மூன்று புரோட்டான்களும், நான்கு நியூட்ரான்களும் கொண்ட லித்தியம் அணுவின் நிறை எண்_____

68) ஒரு அணுவின் நிறை எண்ணிற்கும், அணு எண்ணிற்கும் உள்ள வேறுபாடு______ எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது.

69) $_{20}Ca^{40}$ மற்றும் $_{19}Ar^{40}$ என்பவை______க்கு உதாரணங்களாகும்.

70) பட்டாககளில் காணப்படும் சல்ஃபரில் உள்ள புரோட்டான்களின் எண்ணிக்கை______

71) கார்பன் மற்றும் ஆக்ஸிஜனின் இணைதிறன்கள் முறையே_____ மற்றும் ______ .

72) ஒன்றுக்கும் மேற்பட்ட இணைதிறன்கள் கொண்ட தனிமத்திற்கு ஓர் உதாரணம்____

73) மகரந்கங்களை உண்டுபண்ணக்கூடிய ஆண் இனப்பெருக்க உறுப்பு...............................

74) விதைகளின் மூலம் தாவரங்கள் உருவாகும் நிகழ்ச்சி.................

75) விதைகள் இல்லாமல், பிற நிகழ்வுகள் மூலம் நடக்கும் இனப்பெருக்கம்............ இனப்பெருக்கமாகும்.

76) ________மலர் மொட்டாக இருக்கும் போது பாதுகாக்கின்றது.

77) ______ மகரந்தத்தாளை உருவாக்குகிறது.

78) கருவறுதலுக்குப் பின்_____ கனியாக மாறுகிறது.

79) ஒரு மலரில் மகரந்தத்தாள் காணப்பட்டு சூலகம் இல்லையெனில் அம்மலர் _____ ஆகும்.

80) ________ தாவர இலைச்சாறு வெட்டுக் காயங்களைக் குணமாக்கும்.

81) ஆண் கேமீட் பெண் கேமீட்டுடன் இணைந்து _______ ஐ உருவாக்கும்.

82) உலகின் பெரிய மற்றும் அதிக எடையுள்ள விதை_____ ஆகும்.

83) 35 மில்லியன் ஆர்க்கிட் விதைகளின் எண்ணிக்கை_____

84) இரட்டைத் தேங்காய்______ என்ற இடத்தில் உள்ள இரண்டு தீவுகளில் மட்டுமே முளைக்கும்.

85) _____ திரள்கனிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

86) ஸ்பைரோகைரா_____ முறையில் இனப்பெருக்கம் செய்கிறது.

87) வெலமன் திசு____ எனும் தொற்றுத் தாவரத்தில் காணப்படுகிறது.

88) உருளைக்கிழங்கில் காணப்படும் வளர்வடங்கிய மொட்டுகள்______ எனப்படும்.

89) குமிழத்தின் தண்டின் நுனியில் நுனி மொட்டு பல_____ ஆல் மூடப்பட்டிருக்கும்.

90) _____ ல் தண்டு தரையின் மேற்பரப்பிற்கு மேல் கிடைமட்டமாக வளர்ந்து பின் வளைந்து மண்ணைத் தொட்டு வளரும்.

91) பென்சிலியம் நொட்டேட்டம் என்பது______ ஆகும்.

92) தமிழ்நாடு அரசால் ஒவ்வொரு மாதமும்_______ மாத்திரைகள் வழங்கப்படுகிறது.

93) _____ உலகின் முதல் நோய் எதிர்ப்பு சக்தி மருந்து.

94) முதல் நோய் எதிர்ப்பு சக்தி மருந்து கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு_______

95) மெல்லும் மற்றும் ருசிக்கும் செயல் _____ எனப்படுகிறது.

96) ராஸ்டர் வரைகலைப் படங்களை______ யை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுபவை.

97) _____ என்பது ராஸ்டர் வரைகலைப் படங்களை பதிப்பிக்க பயன்படும் மென்பொருள் ஆகும்.

98) _____ மற்றும் ______ என்பது வெக்டர் வரைகலை படங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

99) _____ என்பது கணினியால் உருவாக்கப்பட்ட தோற்றங்களை உண்மையான உருவம் போல காட்டுவதாகும்.

100) குழந்தைகள் புத்தகத்தில் உள்ள எழுத்துக்களைப் படித்து புரிந்து கொள்வதை விட _______ கொண்டு எளிதில் கருத்துக்களை புரிந்து கொள்கின்றனர்.

..............................................................